DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**STC.No.468/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 5 | Caste | : | |
| Name | : | ஞானராஜ் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 27th day of December 2022.
27.12.2022.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் சந்திப்பு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.03.2014-ம் தேதி இராமேஸ்வரம் கோவில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது சுமார் 12.00 மணிக்கு திரு.நடராஜன் சிறப்பு சார்பு ஆய்வாளர் கோவில் காவல் நிலையம் அவர்கள் கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப குற்ற எண்.26/2014 பிரிவுகள் 143, 341, 188, 353 IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-3

2. புகார் மற்றும் முதல் தகவல்அறிக்கை அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளுக்கு அனுப்பினேன். பின்னர் அன்றைய தினம் சுமார் 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கதிரேசன் மற்றும் மகேஷ் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான நடராஜன், ராமசந்திரன், பொந்துமுனியாண்டி,மற்றும் கதிரேசன் மற்றும் மகேஷ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3.வழக்கில் 11 எதிரிகளை நிறுத்தி மற்ற எதிரிகளை நீக்கம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன்.அந்த எதிரிகள் நீக்கம் அறிக்கை அ.சாஆ-6 ஆகும்.பின்னர் நான் பணிமாறுதலாகி சென்றதால் வழக்கின் கோப்பை காவல் நிலையத்தில் சமர்பித்துவிட்டேன்-